Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.264/2025, Cr.No.83/2025, Kandili PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.8, Page.No.

| | |
|---|---|
| பெயர் | ரூகன் |
| வயது | 34 |
| தந்தை/கணவர் பெயர் | பெருமாள் |
| தொழில் | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் | அத்திப்பட்டு |
| மாவட்டம் | இராணிப்பேட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 01st day of November 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் தற்போது கந்திலி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2025 அன்று இரவு 21.10 மணியளவில் கந்திலி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பிலிருந்த போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த திருப்பதி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் அன்றைய தினமே இரவு 23.00 மணியளவில் கந்திலி காவல் நிலையக் குற்ற எண்.83/2025, BNS பிரிவுகள் 333, 296(b), 74, 115(2), 118(1), 351(3)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 03.04.2025 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் தருமன் மற்றும் முரளி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.6**

**மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே காலை 08.00 மணியளவில் குமுதா எடுத்து ஆஜர் செய்த இரும்பு கைப்பிடியுடன் கூடிய வெட்டுக்கத்தி–1, சிறிய இரும்பு கத்தி–1–ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அவை முறையே **அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக ஏற்கனவே குறியீடு** செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம்–91 மூலமாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம்–91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை சாட்சிகளான திருப்பதி, குமுதா, மல்லிகா, பரிமளா மற்றும் விஜயா, தருமன் மற்றும் முரளி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.04.2025 அன்று பகல் 13.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனை வெளியே வைத்து எதிரிகளான குமரவேல் மற்றும் வீரபத்திரன் ஆகியோரை கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்த வேண்டி தக்க வழிக்காவலுடன் அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட திருப்பதி என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சக்திகணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி அவர் காயம்பட்டவருக்கு ஏற்பட்டது கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியுள்ளார். அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் காயச்சான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை BNS பிரிவுகள் 333, 296(b), 74, 115(2), 118(1), 351(3)–லிருந்து BNS பிரிவுகள் 333, 296(b), 74, 115(2), 118(2), 351(3)–ஆக பிரிவு மாற்றம் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், இவ்வழக்கில் சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் எதிரி குற்றம் செய்தது உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது 26.04.2025 அன்று BNS பிரிவுகள் 333, 296(b), 74, 115(2), 118(2), 351(3)–ன் கீழ் இறுதியறிக்கையை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்

ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.